656

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

பெரிய

# மரணவிளக்கம்

## மனதைத் துலக்கும்.

இது

இராயவேலூரில் வாசஞ்செய்கின்ற வேலங்குடி

ஹாஜியார் நூறுமுகம்மது சாஹிபு அவர்கள் குமாரர்

மௌலானா மௌலவி

**முஹம்மது இபுறாஹீம் சாகிபு அவர்களால்**

இயற்றப்பெற்று.

இதை

கோட்டாறு

மகுதூம்பாவா காஸீம் தரகனாரவர்கள் புதல்வர்

**வா. மு. முஹம்மதுயூசுபு லெப்பை**

அவர்களால் பார்வையிடப்பட்டு.

ஷெரீபூர்

**முஹம்மதிய்யா கௌன்ஸில் ஸபையோரவர்களின்**

நன்முயற்சியினால்,

சென்னை ஜூனா-ஸன் ஆப் இந்தியா பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

1922.

[அணா 5.

# பலநோய்களும் நீங்கும் பாதுகாப்பு மஜ்மூஉமாலை.

இதில் முஹம்மதியாமாலையும், பக்தி ஆனந்தபாத்தி முத்துமாலையும், ஷிபாவுல்வபா முனாஜாத்துமாலையும், தபவுல்வபா முனாஜாத்தும் சேர்ந்தது. ஜுதூரிவபாரீவுல்லஹமற் முதலிய ஆபத்தான முஸீபத்துகளுக்கு இதை ஓதிவந்தால் எவ்விதமான பலாமுஸீபத்துநோய் தொம்பல முதலிய பலவியாதிகளும் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கிவிடும். இதை முருத்துவைத்து ஓதினால் நினைத்தகாரியங்கள் கைகூடும். மருந்தால் தீராத எவ்விதவியாதிகளுக்கும். இதுவே வெகு மேலான அற்புத உற்பன அபூர்வ ருஜ ஔஷதமாத்திரைகளாகிய நுட்பமான ஒரு நூலாயிருக்கும். இதை ஓதிவருவதால் அனேக நற் குணங்களுண்டு.

இதிலடங்கிய பக்தி ஆனந்தபாத்தி முத்துமாலயை பெண்கள் அவர்கள் தங்கள் அருமை குளந்தைகளுக்கு ஒருவிடுத்தம் ஒதி தாலாட்டினால் அக்குளந்தைகள் சுகமாக கிடந்து நித்திரைசெய்து முழிக்கும் இன்னாலை ஒவ்வொருவரும் பரிட்சித்து பார்க்கவும். இது அனுபவமான நூலென்று நம்பவும் சகாயவிலை 0 4 0

# தங்கப்பாட்டுமாலையும், ஷிபாமாலையும்.

இந்த ஷிபாமாலயை கீழ்காணும், விஷயங்களுக்கு ஓதிவந்தால் உடனே நிவர்த்தியடைவார்கள். வெள்ளி திங்கள் இரவுகளில், ஒரே எண்ணமாகயிருந்து மனதுருக்கத்துடன் ஓதிவந்தால்நற்சுகத்தை காண்பார்கள். யாதொரு மனக்கவலைபுடையவர்கள்,தானினைத்தகாரியம் தமக்கனுகூலத்தைநாடியும், ஜுதூரியெனும் வைசூரி, ரிஹால் அஹ்மரெனும் பிளேகு பேதி கால்ரு, காச்சலுடையவர்கள், கன்மப்பிணிகரணப்பிணி புடையவர்கள், இன்னும்வேறு எந்த வியாதியஸ்தர்களானாலும் இந்தஷிபாமாலயை ஓதிவந்தால் நற்சுகத்தை காண்பார்கள். பிணியுடையவர்கள் ஓதினாலும் அல்லது பிணியுடையவர்களுக் கருகே யிருந்து வேறொருவர் ஓதி வந்தாலும் இப்பாடலில் அமைத்தம்பர் நாமத்துடைய நாதாக்கள், மூதாக்களின் துஆ பறக்கத்தால் நற்சுகத்தைக் காண்பார்கள். விலை அணா 5.

# புஸ்தக விளம்பரம்.

| | | | |
|---|---|---|---|
| பலநோய்களும் நீக்கும் பாதுகாப்பு மஜ்மூஉமாலை | 0 | 4 | 0 |
| தங்கப்பாட்டு மாலையும் ஷிபாமாலையும் | 0 | 5 | 0 |
| ஷை அறபுத்தமிழ் | 0 | 8 | 0 |
| கெற்பமாலையும் நஸீஹத் துன்னிஸாவும் | 0 | 5 | 0 |
| ஷை அறபுத்தமிழ் | 0 | 7 | 0 |
| ஜுதூரிமாலையும் முஸீபத்து விலக்கம் முனாஜாத்தும் | 0 | 5 | 0 |
| மிஃறாஜுமாலை | 0 | 12 | 0 |
| மிஃறாஜுமாலை வசனம் | 0 | 5 | 0 |
| மான்கதை பாட்டு | 0 | 4 | 0 |
| ஷை மான்கதைவசனம் மான் ஈமான்கொண்ட கிஸ்ஸா | 0 | 5 | 0 |
| பெரிய மரணவிளக்கம் மனதைத் துலக்கும் சுத்தப்பதிப்பு | 0 | 5 | 0 |
| மரணவிளக்கமும் ஹதீதும் | 0 | 3 | 0 |
| ஞான ஆசாரக்குறவஞ்சி | 0 | 2 | 0 |
| குணங்குடி மஸ்தான்சாஹிபு ஆனந்தக் களிப்பு | 0 | 0 | 6 |
| ஆத்தங்கரை நாச்சிமுனாஜா | 0 | 0 | 6 |

விலாசம்:—

**பூசுபிய்யா கம்பெனி,**

பெருமாள்குளந் தெருவு, கோட்டாறு.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்

பெரிய

# மரண விளக்கம் மனதைத் துலக்கும்.

காப்பு.

அழிவிலா வல்லவனே யடங்கலை யமைத்தவனே
எல்லா மழித்துப்பின் னெழுப்புதல் செய்பவனே
என்னுளு மெங்கள்பிழை எல்லா மழிப்பவனே
மரணவிளக் கம்பாட மன்னவாநீ காப்புத்தானே,

இது முனாஜாத்து. மத்னவி இராகம்.

அழிவில்லாத காயிமான ஹையனே
அழித்து எழுப்பி கேள்விகேட்கும் மெய்யனே 1

ஸல்லிஸல்லிம் குல்லமெளமின் றப்பனா
ஸையதுஸ்ஸா தாத்துபேரில் ஹஸ்பனா 2

இன்னமவரின் வீட்டுஜனங்கள்பேரிலும்
இன்னமஸ்ஹா பான பெரியோர்பேரிலும் 3

இன்னமவரைத் தொடர்ந்தவர்கள் பேரிலும்
இன்னமற்று மன்பியாக்கள் பேரிலும் 4

சொல்லிஸலவாத்தும் ஸலாமுமுன்னிடம்
சொல்லிகெஞ்சி கேட்கிறோம் செய்ஸம்மதம் 5

முமீனீங்கள் முஸ்லிமீங்கள் பாவங்கள்
முழுதுமழித்துசெய் ஸதாநீ லாபங்கள் 6

மெளத்துஹாலிலோதவை தௌஹீதை நீ
மூடிகிடாமல் நீக்கிவை இபுலீசைநீ 7

இங்குமங்கும் நொன்பலத்தை கார்த்துநீ
எங்குஞ்சுகமே தந்து கிருபை செய்யிநீ 8

இன்னம் ஸஹ்றஹில் ஹாஸைக்கருத்தின்லெனா
இன்னமற்று முதவியெல்லாமிய்லெனா 9

1-உணர்ச்சி வருத்துதல்- அதே இராகம்.

இந்த உலகில் வாழ்வுநிலையா அல்லவா
இந்த அப்யானில் தெரிந்து கொள்ளவா 1

நகையு முதலுமிழந்து பிரியலாகுமே
நகரமிழந்து கபுறு பகரமாகுமே 2

பெண்டுபிள்ளை சொந்தரை நீபிரிகுவாய்
பின்புகாண மீண்டிடாம லாகுவாய் 3

வீடுவாசல் காடுதோட்டம் நீங்குமே
விரும்பி திரும்பி வந்திடாமல் நேருமே 4

பெண்டுபிள்ளை நேசராசை இங்குகாண்
பின்பு அவ்ரோ டேதுகூட வேளைகாண் 5

ஆடுமாடு வாகனங்கள் நீங்குமே
ஆருமில்லா காடுபோக நேருமே 6

எங்கும்போயி பின்புவருவோ மென்பமே
இறந்துபோயி வருவதுண்டோ சொல்லுமே 7

இன்னபொருளும் சொத்துமுடைகள் வேண்டுமே
இன்னமின்ன கட்டிடங்கள் வேண்டுமே 8

என்றுநாட்டமிருந்த திழந்து சாவியே
என்று மீளா பயணமே என்னுவியே 9

சேதமே யுன்மனதினு லாவதேதுமே
சேர்ந்துவருமுன் கபுறுசேர நேருமே 10

இரவுபகலா வயதைவீணி லிழந்தியே
இறையோ னிடத்தி லென்னசொல்வே தோஷியே 11

கேலிசிரிப்பு லகுவு லகுபி லிருந்தியே
கேடுபிடிக்க வழிகளுனக்கு வருந்தியே 12

எந்தவிதமு மௌத்துபிடித்து போவெநீ
யேதுமுதவா தோஷியாக ஆவெநீ 13

ஆகையாலிது நிலையிலாத லோகமே
ஆகிறம்தான் நிலைமக்கா மென்றோதுமே 14

2-வது இதுவுமது. அதேஇராகம்.

நிலவுபொழுது மாஹ்தாபு போலவே
நிலத்திலாண்டு மரணமடைந்தார் கேளுவே 1

அன்பியாக்கள் முறுஸலீங்க ளேத்தனே
அன்பான வொலிகளத்தா பெத்தனே

ஸாலிஹீங்கள் ஸாதிகீங்க ளெத்தனே
ஸாயிமீங்கள் ஸாபிரீங்க ளெத்தனே 3

ஆலிமீங்க ளாபிதீங்க ளெத்தனே
ஆமிலீங்க ளாஷிகீங்க ளெத்தனே 4

ஆரிபீங்க ளாபிலீங்க ளெத்தனே
ஹாக்கிமீங்க ளாதிலீங்க ளெத்தனே 5

தாரிக்குஷ் ஷஹ்வாத்தி னல்லோ ரெத்தனே
தாயிபீங்கள் தாஹிரீங்க ளெத்தனே 6

இல்மு பதினு லோதினோர்க ளெந்தனே
இல்மு மொழுங்கு முடையவர்க ளெத்தனே 7

தாரெதுனியா விழந்து மாண்டா ரறியிதே
திரும்பி வருவா ரென்றிராம லாச்சுதே 8

சிறுதுபேரின் பேருமிடமு மறைந்ததே
சிறுதுபேரின் கபறுக்குறியு மறைந்ததே 9

இந்த உலகில் வாழ்வைநம்பி இருந்துநீ
இறையோ னிடத்தில் துன்பத்திற் காகாதெநீ 10

3-வது இதுவுமது அதே இராகம்.

ஸையதுஸ்ஸா தாத்துகைறுல் அன்பியா
ஸகலலோக மவருக்கே படைத்தான்குதா 1

அந்தநபியே போனபின்பு யாருகாண்
அந்திபகலு மெனக்குஸத மென்போருகாண் 2

நபிஷைஹைறபு ஸுதுறாகு மெங்கெகாண்
நம்மையின்ற தாயிஹவ்வா. வெங்கெகாண் 3

நபி சுலைமானிபுனு தாவூதெங்கெ காண்
நபி அபுல்பஷறுன ஆதமெங்கெ காண் 4

எங்கெமூஸா எங்கெயீஸா சொல்லுகாண்
எங்கெதாவூ தெங்கெஹாறூ னேதுகாண் 5

எங்கெ இப்றுஹீமு இஸ்மாயீலுகாண்
எங்கெ யஃகூப்யூசுபுஇல் யாசுகாண் 6

எங்கெ இத்ரீஸெங்கெ அய்யூபஷ்ஸ்காண்
எங்கெ மற்றும் பாக்கி அன்பியாவுகாண் 7

நபிகளிஷ்ட நருமைமக்க ளெங்கெகாண்
நமக்கு தீனைத் துலக்கித்தந்தோ ரெங்கெகாண் 8

இத்தனை சிதேவியும் மாண்டாரெகாண்
எத்தனைநா ளிங்குனக்கு வீவுகாண் 9

இந்த வுலகில் நல்ல அமலைத் தேடுகாண்
இறையோ னிடத்தில் மக்பிரத்தைக் கேளுகாண் 10

4-வது இதுவுமது. அதே இராகம்!

வருஷைமந்நூறெங்கெ பிறுஔன் ஆண்டுகாண்
வழியில் நீலாற் நடுவிலே மாண்டானெ காண் 1

அவ்ஜுனூ ஆயிரம் பரலிங்குகாண்
அவ்ஜ்ஆண்டு வேரடியில் மாண்டானெகாண் 2

காறூனுசொத்தின் சமத்திறு லாண்டானெகாண்
காபிர்ஹறூமி மண் முழுங்கலானெனெ காண் 3

ஷத்தாது ஸதமாவாழ சொர்க்கம் கட்டிகாண்
ஷண்டாளன் விழுந்து செத்து மாண்டான் கேளுகாண் 4

ஆதுகூட்ட மெந்தவகையி லாச்சுகாண்
அறிந்துபயந்து நேர்வழியில் தங்குகாண் 5

ஆத்துகூட்டமும் தமூதுகவுமு காண்
லகுனத்துல்லாவில் ஹலாக்கா போச்சுகாண் 6

றப்பனே வல் தள்ளிமாறு செய்தாரெகாண்
றப்புகஹறும் கோபமு மடைந்தாரெகாண் 7

நீருதாக்குமாறு செய்யாதீரெகாண்
நீண்டகாலம் நரகிலே வேகாதெகாண் 8

ஆரையும்நீர் துன்பஞ் செய்யாதீரெகாண்
ஆருமடையாப் பெரும்ஹலாக் கடையாதெகாண் 9

5-வது இதுவுமது. அதே இராகம்.

சிலர் சதமென் றிருந்த வாழ்வை யெண்ணியே
சொந்தநாயன் சொன்னசொல்லைத் தள்ளியே 1

ஏதுகேள்வி செத்தபின்பென் றெண்ணியே
ஏககருமம் பாவஞ்செய்ய எண்ணியே 2

குரு துரோகஞ் செய்தவர்க ளெத்தனே
கடுங்குபாடஞ் செய்தவர்க ளெத்தனே 3

அடுத்துப்பழகி குடிகெடுத்தோ ரெத்தனே
அடுத்தாச்சேர்ந்து பறித்துப் பகைத்தோ ரெத்தனே 4

எண்ணந் தீரமட்டுஞ் சேர்ந்திருந்தோ ரெத்தனே
எண்ணம் முடிந்தா லெதிர்த்துப் பகைத்தோ ரெத்தனே 5

ஒண்டினோரைக் குடிகெடுத்தோ ரெத்தனே
ஒண்டுசொல்லி றண்டகித்தோ ரெத்தனே 6

களவுமோசஞ் செய்து பிழைத்தோ ரெத்தனே
கடனைக் கொடுக்கா கடுங்குபாட ரெத்தனே 7

புருஷனிருக்க பிறரைப்புணர்ந்தோ ரெத்தனே
பிறரைப்புணர்ந்து பெண்டிழந்தோ ரெத்தனே 8

வேஷிதனத்தில் வயதிழந்தோ ரெத்தனே
வாஷியில்லா நோயிலானோ ரெத்தனே 9

அல்லும்பகலும் பொருளைக்காத்தோ ரெத்தனே
அறவெ ஈயா லுத்தரின ரெத்தனே 10

பொய்யை மெய்யா இட்டுக்கட்டி யெத்தனே
போக்கிரிக ளாகி கெட்டோ ரெத்தனே 11

தொழிலுவட்டி வாங்கிக் கெட்டோ ரெத்தனே
தொழுகைநோன்பை விட்டுக்கெட்டோ ரெத்தனே 12

பொய்சாட்சி சத்தியம் செய்பவர்க ளெத்தனே
பூமியிலேற்பட்டு கெட்டோ ரெத்தனே 13

கள்ளு சாராயம் குடிப்போ ரெத்தனே
கர்த்தனைவலைத் தள்ளி நடப்போ ரெத்தனே 14

தந்தை தாயை நோகவைத்தோ ரெத்தனே
தன்பிறந்தோ ரைப்பகைத்தோ ரெத்தனே 15

சொந்தபந்தை வெறுக்கடித்தோ ரெத்தனே
சுகங்கொடுத்தோ ரோடெதிர்த்தோ ரெத்தனே 16

ருணத்துரோகி குருத்துரோகி யெத்தனே
ருணங்கொடுத்தோரை வதைத்தோ ரெத்தனே 17

கூட்டிக்கொடுத்துக் கூலிவாங்கி யெத்தனே
கொடுமை லஞ்சம் வாங்கி தின்றோ ரெத்தனே 18

எதிரிவாழ கண்டு வெடிப்போ ரெத்தனே
எரிந்த தீயை யெதிர் பார்ப்போ ரெத்தனே 19

ஆலிமோடு ஹஸதுவைப்போ ரெத்தனே
ஆழநரகில் போறவர்க ளெத்தனே 20

சூதுஆடி காசுதேடி யெத்தனே
சொர்க்கமிழந்து நரகிலாவோ ரெத்தனே 21

கூடுபஞ்சா கள்வணங்கி யெத்தனே
கொடிப்படம் தாபூத்தைவணங்கி யெத்தனே 22

இன்ன மிவைகள்போலப் பாவமெத்தனே
இந்தலோகில் செய்துகெடுவோ ரெத்தனே 23

இந்தவிதமா யுள்ளமனுஷா ளெத்தனே
இந்தவுலகி லிருந்துமடிந்தா ரெத்தனே 24

நரகமிவரைப் போலவர்க்கே நேசனே
நாயன்படைத்தான் பயந்துகொள்நீ வாசனே 25

லெக்ஷவருஷ மிருந்துமொருநாள் சாவெநீ
லகுனத்துல்லா வாகிடாமல் பேணுநீ 26

## 6-வது இதுவுமது அதே இராகம்.

மூச்சைவிட்டு மூச்சிழுக்கு முன்னமே
மௌத்துமலக்கு பிடிக்கப்பட்டோ ரெத்தனே 1

பேச்சுப்பேசி பேச்செடுக்கு முன்னமே
பிடித்துமலக்குல் மௌத்து செத்தோ ரெத்தனே 2

படுத்துறங்கி யெழுந்திடாமல் நேசனே
படுக்கைதனிலே மௌத்தடைந்தோ ரெத்தனே 3

அடியெடுத்து வைக்குமுன்னே நேசனே
அடுத்துமௌத்து பிடிக்கப்பட்டோ ரெத்தனே 4

சிமிட்டிகண்ணைச் சிமிட்டுமுன்னே நேசனே
செத்தவர்க ளிந்தவுலகி லெத்தனே 5

நேற்றிருந்து இன்றிறந்தோ ரெத்தனே
நெருப்பிலெரிந்து கரிகிசெத்தோ ரெத்தனே 6

கவிழ்ந்துகப்ப லிறந்தவர்க ளெத்தனே
கயற்றைக்கழுத்தில் மாட்டிச்செத்தோ ரெத்தனே 7

ஒத்தஸஜதா செய்துமறு ஸஜதா முன்னே
உற்றவுயிரை விட்டுசெத்தோ ரெத்தனே 8

நிலைறுக்கூகு இருப்பிலிறந்தோ ரெத்தனே
நஞ்சுதின்று வெறுத்துச்செத்தோ ரெத்தனே 9

விஷவியாதி பேதியிலிறந்தோ ரெத்தனே
விஷங்கடி தாஊனிலிறந்தோ ரெத்தனே 10

ஆகையினாலிது நிலையில்லாத வாழ்வுகாண்
ஆகிறம்தா னிலைமக்காமென் றோதுகாண் 11

இந்தவுலகம் யாருக்கும் சதமில்லையே
இங்கெயாரும் நிகழவாழ்ந்தோ ரில்லையே 12

இதுவை நம்பி யிருந்தவர்க்கு நாசமே
இதிலும் வழி கேடாயிப்போனால் மோசமே 13

ஆகிரத்தை நம்பினோர்க்கு வாசமே
அங்கெயுதவும் நன்மையிங்கே தேடுமே 14

எந்தவிதமும் மிதிலுமாகா திறந்துநீ
இந்த வுலகை விட்டுப்பிரிந்து போறெ நீ 15

ஆகையாலே தேடுநல்ல செய்கைநீ
ஆகிரத்தில் மோக்ஷம்பெறுவே கேளுநீ 16

## 7-வது இதுவுமது. அதே இராகம்.

என்னசெய்வோ மிஷ்டரே கைசேதமே
எந்தவிதமும் மௌத்துபிடித்தே தீருமே 1

பிறந்திடாமே நாமிருக்க வேண்டுமே
பிறந்ததாலே மௌத்து சேர்ந்துகொள்ளுமே 2

நாயனாட்டம்போல அதுவே முடிந்தது
நன்றுசெய்யி தீங்கைநீக்கு விதியது 3

மக்கமனுஷா ளருமையில் றகுமானீ
மறந்திடாதே செய்கிருபை மிகுநீ 4

மௌத்துவருத்த முந்தன்பேரி லாகையில்
மக்கமனுஷா ளுதவியேது பாரதில் 5

அந்தவேளை தாய்தகப்ப ரெங்கெயோ
அண்ணன் தங்கை மக்கமனுஷா ளெங்கெயோ 6

தம்பிதமக்கை சொந்தநேச ரெங்கெயோ
தாதி தாதா நானிநாணு வெங்கெயோ 7

சிறியபெரிய தந்தைபாட்டி யெங்கெயோ
சிறியபெரிய மாமுகாலா வெங்கெயோ 8

பெண்டுபிள்ளை பேரரெல்லா மெங்கெயோ
பிறியமருமைக்கார ரெல்லா மெங்கெயோ 9

புருஷனும் மற்றுமுறவா ரெங்கெயோ
பெருமைப்பொருளு மருமை நகையு மெங்கெயே 10

எந்தப்பொருளு மந்தவேளை நேசரே
இடையிலுதவி செய்திடாது நீதரே 11

காசுபணங்க ளந்தவேளை யெங்கெயோ
காடுவாஸல் வீடுதோட்ட மெங்கெயோ 12

ஆஸைவைத்து சேர்த்தபொருளு மெங்கெயோ
ஆடுமாடு வாகனங்க ளெங்கெயோ 13

நாடுநகர மானியங்க ளெங்கெயோ
நம்மளடிமை ஊழியர்க ளெங்கெயோ 14

நாமள்செய்த நன்மைதவிர ஏதுமே
நமக்கு அந்தவேளை யுதவா தோதுமே 15

ஆகையாலே தேடுமெத்த நன்மெயே
ஆகிறத்தி லுண்டுனக்கு ஷங்கெயே 16

சென்றவயது சென்றதப்பா வீணிலே
செல்லவாற வயதைப்போக்கு தீனிலே 17

8 வது இதுவுமது. பதம்.

மரணம்விடாது மலக்குல் மௌத்தென்னுமுன்னை
மறந்துவிடாது பலசமத்திருந்து பயணம்விடாது 1

கல்லுனுட்டுளைசெய்து தேரைபோலிருந்தாலும்
கருங்கல்லுகோட்டைக்குள் மறவாயொளித்தாலும்
கடலும் திடலும்விட்டு கண்மாயமானாலும்
கணக்கற்ற மருந்தைதீ பொசித்து செமித்தாலும் (மா) 2

கோடி மனுஷாளுக்குள் கூடிக்கொண்டிருந்தாலும்
கணக்கற்ற வாசர்கள் கைக்குள்ளிருந்தாலும்

உள்ளூரில் பேதிவந்தா லூருக் கோடினாலும்
அல்லும் பகலும்நீநி அனுதினங் குறைத்தாலும் (மர) 3

எமனை பயந்துதினம் இருகண்ணை விழித்தாலும்
அறவே எழுந்துறக்கம் ஆந்தைபோ லிருந்தாலும்
பெருத்த இருளிடத்தில் தூரத்த எமன்வருகும்
பேடித் தனத்திலே பந்தம் பிடித்தாலும் (மர) 4

பேய்பிசாசைக்கண்டு பயந்தா லெமன்வருகும்
பயணம் தனியே சென்றால் பகையெதிரில் வரும்
இந்த நினைவுகொண்டு மாந்திரக்காரரிடம்
ஏதோ சரடுநூலை வாங்கி சுமந்தபோதும் (மர) 5

மூச்சை யடக்கிக்கொண்டு முக்கோடி வருஷமட்டும்
பேச்சை யடக்கிமலை பொதும்பி லிருந்துகொண்டும்
மனுஷனை விட்டொழிந்து மறவாய் திரிந்துகொண்டும்
எமன்வரவழி எங்கேயெனவே நினைத்தபோதும் (மர) 6

9-வது இதுவுமது. மத்னவி இராகம்.

அங்கெயுதவும் நன்மை இங்கே தேடுகாண்
அங்கெ சொர்க்கம் சன்மைாகத்தைச் சேருகாண் 1

நப்புநபியுஞ் சொன்னசொல்லைக் கேளுகாண்
நஹ்றமத்துல்லாஹி தினம் நீ தேடுகாண் 2

மாறவர்க்குக் கொஞ்சமுஞ் செய்யாதெகாண்
மாறுசெய்து தோஷமைை கொள்ளாதெகாண் 3

முன்னை மாறுசெய்து கெட்டோர் பாடுகாண்
முத்து உலமாநாவு சொல்லக் கேளுகாண் 4

பாவமறவே செய்திடாதே பேணுகாண்
பேணுகாணும் பேணுகாணும் பேணுகாண் 5

பாவமேது மானமேது சொல்லுகாண்
பறத்த மழுகை விசனத்தோடே யோதுகாண் 6

இந்தவெந்தன் பாவத்தைநீ ஜகபூர்
இரக்கஞ்செய்து பொறுக்கவேணும்நீ ஜகூர் 7

செய்து வைப்பா விட்ட பிழையைப் பின்புகாண்
செய்த பயம் பெறுமின்பு வம்புதான் 8

செய்திடாமலிப்ப தௌபா சாவிலே
செய்யலாமென் போரு வீடு ஞருமிலை 9

அஞ்சவேணாதொழுதா மிஸ்திகு பாரைநீ
அஞ்சி கெஞ்சியோதி கேளுநாப்பைநீ 10

நித்தமோது இந்த இஸ்திக்கு பாரைநீ
நிச்சயம்நீ சுத்தம்பெறுவே பாருநீ 11

## அஸ்தக்பிருல்லாஹில்லதீ லாஇலாக இல்லாகுவல் ஹையுல்கையூம் வஅதூபு இலைகி நபிகள் அலைகிஸ்ஸலாத்து வஸ்ஸலாம் ஸக்ருத்துஹாலே விசனிக்குதல்.

அதே இராகம்.

ஸையதுஸ்ஸா தாத்திகைருல் அம்பியா
சொல்லி சக்கருத் தாஹாவென்று மிகுதியா 1

ஆத்து ஆத்து மௌத்தே மௌத்தே யென்பவர்
அழுது அழுது தினமும் பெருமூச்சிவிட்டவர் 2

சொலித்து அழுகை நீரைநொந்து தன்மனம்
சொல்லுவார்களும்மத்திற்கு அனுதினம் 3

உம்மத்தா சக்ருத்துஹாலே நினையுங்கள்
உலகவாழ்விற் வயதிழக்கா திரியுங்கள் 4

ஹிம்மத்தா யிமானைக்காத்து வையுங்கள்
இஜ்ஜத்தா இஸ்லாமை நடந்துகொள்ளுங்கள் 5

துஷ்டத்தனத்தை வெறுத்துத் தீனைப் பிடியுங்கள்
துன்பமௌத்தி லணுகிடாது பணியுங்கள் 6

ஆரையும் ஸக்ருத்து விட்டதல்லகாண்
ஆருக்குமப் போதுஹாலு ஹுண்டுகாண் 7

மௌத்துஹாலே ஆகம்ஸபியுல்லாகிநம்
மெத்தநொந்து சொல்லுவாரா மனுதினம் 8

என்னசெய்வே னென்னை மௌத்து பிடிக்குமே
என்ன யேதும் தாங்கமுடியா கஷ்டமே 9

ஷீதுநபியின் செய்தி என்ன சொல்ல நான்
செழிப்புமேது சிரிப்புமேது அழுகைதான் 10

சொல்லிக்கொண்டே வாஹ்றசக்ருத்தாஹலேவ
செல்லவைத்தார் வயதை ஷீதுசாகிபே 11

நூஹுநபித்தம் மௌத்து ஸக்ருத்தெண்ணியே
நொந்துமெத்த வடிக்குவார்கண் தண்ணியே 12

நினைத்து மௌத்தை எந்தநாளும் ஸக்ரியா
நனையதாடி அழுகுவார்கள் மிகுதியா 13

ஸக்ரிமகனாரான யஹ்யாசேதிநான்
ஸற்று மெழுதக்கூடுமா என்றலெகாண் 14

நினைத்து மௌத்தை அழுது சப்தமிடுகுவார்
நனையஜுப்பா அழுகைநீரை வடிக்குவார் 15

கதறி அழுது சிறுதுவேளை மயங்கியே
கஷ்ட மௌத்தை நினைத்து பதறி நடுங்கியே 16

காடோ செடியோ மலையோ புதரோ தேடியே
கண்ணு முகமும் அழுது அழுது வீங்கியே 16

போயிசிலநாள் சென்று வருவார் வாடியே
பின்னு மௌத்தை நினைத்துப்போவா ரோடியே 18

நினைத்து இப்ருஹீமு சக்ருத்தை தினம்
நொந்து அழுது புலம்புவார்க ளனுதினம் 19

மௌத்து கஷ்டம்போலெ கஷ்டமுண்டுமா
மௌத்தை விட்டும் தப்பித்தோரைக் கண்டமா 20

என்னசெய்வேன் னென்னசெய்வேன் னென்றேங்குவார்
என்று சொல்லி அழுகுவார்கள் ஸார் ஸார் 21

அழுகைநீரு தாடிநனைந்து வடியுமாம்
அழுகிற் கடந்த தாடி இப்ருஹீமுக்காம் 22

இன்னமற்ற அம்பியாக்கள் ஹாலைநான்
என்ன இந்த சிறுகித்தாபி லெழுதகாண் 23

நபிகளிந்த ஹாலிலான போதுநீ
நம்பிதுனியா மிழந்திடாதே நினைநீ 24

## ஒலிகள் றஹ்மத்துல்லாஹி அலைஹிப்
## லைக்ருந்து ஹாலை விசனிக்குதல். அதே இராகம்.

சையதுஸ்ஸா தாத்திகைருல் அவுலியா
சையதுல் அக்தாபி கைருல் அஸ்பியா 1

குத்துபு அக்தாபான அப்துல்காதிறு
கதறி அழுவார் மௌத்தை நினைத்து ஜாக்கிரு 2

அழுது யாஹூவென்று மூச்சை விடுகுவார்
ஆஹசக்குத்தாஹூவென்றே அழுகுவார் 3

ராவுபகலும் மிந்தவிசன ஹாலுலே
ராஜ ரிழுந்தா ருயிரை யிந்த பாரிலே 4

பாயெஷீது ஹஸனு இப்ருஹீமுக்கும்
பாஹனீபா ஸூபி கஸ்ஸாலியுக்கும் 5

அல்லும்பகலு மழுகையேதான் னிருந்தது
அடுத்து அடுத்து மௌத்து நினைவே கடந்தது 6

மாலிக்கு ஹம்பல் இமாமு ஷாபியி
மாணிக்கம் அப்துல் வஹ்ஹாபு யாபியி 7

கைருல் அக்தாபி யிமாமு ஷாதிலி
கைருல் அஸ்பியாபி ருல்பக்காவொலி 8

அழுகுவார்க ளெண்ணி மௌத்தை ஸார் ஸார்
அலறுவார்க ளெண்ணி மௌத்தை சிறுதுபார் 9

ஹஜ்ரத்து ஷாஹூல் ஹமீது அதனமா
அழுகுவார்க ளெண்ணி மௌத்தை மிகுதமா 10

பாக்கிவொலிகள் பாடிந்த பாடுதான்
பாருமிங்கே மௌத்திழுந்தோ ராருகாண் 11

சொல்லமெத்த அவுலியாக்கள் ஹாலைநான்
சின்ன புஸ்தகமே யிதுதா னாதுகாண் 12

போயிக்கேளு ஆலிமீங்கள் சொல்லகீ
போதனையில் போயிடாதே கேளுநீ 13

அவுலியாக்கள் பாடியிது வொன்றுச்சுகாண்
ஹாலுமிந்த னென்னகொஞ்சம் போசிகாண் 14

## சக்ருத்து விபரம். அதே இராகம்.

மௌத்து வருத்தம் துன்பத்தைநீர் கேளுகாண்
மிகுந்த வருத்தம் ஸஞ்சலம் கைஸேதமே 1

எலும்பு நரம்பு நொறுங்கி யறுந்து போகுங்காண்
என்னயேலும் நம்மளால் கைஸேதமே 2

எலந்தைமுள்ளில் மெலிந்ததுணியைப் போட்டுகாண்
எடுக்கஇழுக்கும்போலயாம் கைசேதமே 3

அறுத்தகோழி துடிக்கும்போல ஹாலுகாண்
அதனமதிலும் துடிக்கலாகும் ஸேதமே 4

கோழிபிடித்து சாருபிழியும் போலகாண்
கர்த்தன் மலக்கு பிழியுவார்கள் கைஸேதமே 5

பாக்குமரத்தை பாழமாக்கும் போலேகாண்
பாளமாக்கப் படுமுடல் கைஸேதமே 6

புலிகள் நரிகள் கிழித்தபோதிலும் லேசுகாண்
பொறுக்கமுடியா வருத்தமௌத்து ஸேதமே 7

பெருத்த நெருப்பி லெரிந்துவெடிப்பது லேசுகாண்
பொறுக்கமுடியா துயரமே கைஸேதமே 8

வெட்டி தூளு செய்வதுமது லேசுகாண்
விட்டுப்போக வருத்தமே கைஸேதமே 9

தட்டி நொறுக்கி திரிவெரிப்பது லேசுகாண்
தட்ட யேலா கஷ்டமே கைஸேதமே 10

செக்கிலாட்டிக் கொள்வதுமது லேசுகாண்
செக்கிலாட்டப் படுமுடல் கைஸேதமே 11

கதறகதற சதைவகுக்கும் போலேகாண்
கதறமலக்கு வதைக்குவார்கள் கைஸேதமே 12

சாகுமுன்னே கண்ணுனாறும் பாருகாண்
ஸஞ்சலங்கள் மிகுதமே கைஸேதமே 13

நாவடைத்து கிட்டுமுட்டாய் மூச்சுகாண்
நட்ட முழிகளாகுமே கைஸேதமே 14

பட்டுபட்டு யென்றுமொழிகள் விட்டுகாண்
புட்டுபட்டு போகுமே கைஸேதமே 15

கோடி ஜனங்களிருந்து லாபமென்னகாண்
கேடுதட்டி உதவிடார்கள் கைஸேதமே 16

பின்பு கொள்வாருயிரை மலக்குல் மௌத்துகாண்
பிரியுமிந்த இன்ப துன்பஞ் சேதமே 17

கத்திபேசி கொண்டிருந்த வாயிகாண்
கத்திடாமல் மூடுமே கைஸேதமே 18

கடந்தவேலை செய்திருந்த கையிகாண்
கிடந்து சோம்பி தூங்குமே கைஸேதமே 19

நடக்கமடக்க வோடிதிரிந்த காலுகாண்
நீட்டிவைத்து தூங்குமே கைஸேதமே 20

எண்ணுமெத்த சுகமடைந்த கூடுகாண்
இன்று மண்ணில்தூங்குமே கைஸேதமே 21

வெந்து நொந்து நாறுவேளையாச்சுகாண்
வந்து வாழ்வ தேதினி கைஸேதமே 22

இங்குதினு மூன்றுவேளை யுண்டுகாண்
இனிஇல்லாம லாகுமே கைஸேதமே 23

நல்லவர்க்கு நிகுமத்தெங்கு முண்டுகாண்
நல்லமௌத்து மவருக்கே சந்தோஷமே 24

பிறந்தமிங்கே பிறப்பித்தோனை வணங்குகாண்
பிறந்துவணங்கா பாவமே கைஸேதமே 25

இந்தவுலகின் வாழ்வு கனவைப் போலேகாண்
இதுவே நம்பி இருந்தவர்க்கு ஸேதமே 26

அழகு வயதை வீணில் செலவு செய்துகாண்
அங்கேமோசம் பெறுவெயே கைஸேதமே 27

கடந்தகால மாண்டுமொரு ஞானிறந்துகாண்
கிடந்து கபறில் ஆ[illegible]வே கைஸேதமே 28

ஆசையாலே செய்யினல்ல செய்கைகாண்
ஆகிரத்தி லுண்டுனக்கு வா[illegible]மே 29

லேஸாமாகும் மௌத்து கஷ்டம் சேருகாண்
லாயிலாக இல்லல்லாகு வோதுமே 30

## பழுத்திலொரு மலக்குச் சொல்வது அதே இராகம்.

உயிரைமலக்கு பத்து முன்னொரு மலக்குகாண்
உனக்கு சொல்லும் செய்திகேள் கைஸேதமே 1

இந்தகாரூ வரையிலாண்டு இப்பகாண்
இறந்துபோகப் போகிறீயே கைசேதமே 2

இந்தத் துனியாவுக்குத் தேடி வைத்தேகாண்
இந்தவேளை புதுவுதா கைசேதமே 3

கொஞ்சநாளைக்காக வயதை யிழந்திருகாண்
கெஞ்சினாலும் மீள்வதில்லை கைசேதமே 4

இந்தவுலகி னாசையில் வணங்காமெகாண்
இருந்து வழிகேடானியே கைசேதமே 5

மௌத்துசெய்தி பக்கமென்ற சொல்லைகாண்
மனதிலெண்ணி நொந்தியா கைசேதமே 6

மௌத்தின்பிறகு வீடுதனக்கே தென்றுகாண்
மௌத்துஹாலி லறிவியே கைசேதமே 7

இல்லை நல்லோர் பேரிலேதும் தொல்லைகாண்
இல்லைதுன்ப மவருபேரி லேதுமே 8

தூய்தானவர்கள் சாககொஞ்ச முன்னைகாண்
தனக்கு சொர்க்கம் காண்குவார் ஸந்தோஷமே 9

தூய்பசெய்கை செய்திருந்தா லின்னுங்காண்
தூய்யசொர்க்கம் காண்குவோ சந்தோஷமே 10

வயதை வீணிலிழந்துகெட்ட பாவிகாண்
வாழ்நரகம் காண்குவான் கைசேதமே 11

நாளுதோறும் நன்மைசெய்ய மறக்காதேகாண்
நாளைவாழ நரகமே தேடாதேகாண் 12

## மவுத்து ஹாலில் இபுலீஸ்வந்து யேமாற்றுதல்.

மௌத்தாகும்போது தாகமென்று சொல்லநான்
மனதுவைத்து கேளுமிந்த கஷ்டமே 1

சகைகடலின் நீரைக் குடித்தபோதிலும்
சற்றுமடங்கா தாகமே கைசேதமே 2

அந்தவேளை வந்து இபுலீசுதான்
அடுத்துவந்தே மாற்றுவான் கைசேதமே 3

உனக்குப் பழக்கவாழி லொருவர் போலவன்
உகந்துவேஸ மெடுக்குவான் கைசேதமே 4

நிறைந்தபெருப்ப மானதண்ணீர் பாத்திரம்
நேரிலுனக்கு வைத்துச் சொல்வான் கைசேதமே 5

என்ன கஷ்டம் துன்பமுன்னைத் தொட்டது
என்னநோயி லாகினாய் கைசேதமே 6

கெட்டவர்கள் சொல்லுவாரா மிஷ்டனே
குடிக்க இந்தத் தண்ணீருதா கைசேதமே 7

சொல்லுவானு மிந்தநீ ருனக்காகநான்
சொந்தமாகக் கொண்டுவந்தேன் நேஸனே 8

தீனைவிட்டு இருகுதா வென்றென்று சொல்
தீனமொறுங்கி தெளிவெநீ சந்தோஷமே 9

உலகம்படைத்தோ னில்லையென்றும் சொல்லுனீ
உனக்குத்தாகந் தீர்க்குறேன் சந்தோஷமே 10

அல்ஹமதுக்கு இல்லைனுபுவத் தென்றுசொல்
அகத்தியஞ் சொல் நீருதாறேன் நேசனே 11

கெட்டவர்க ளமையுவார்கள் இபுலீசுக்கு
கெடுத்து ஈமானீரும் யிப்யான் ஸேதமே 12

உடைத்துநீரு பாத்திரத்தைப் போக்குவான்
உடனெ ஈமானுயிரும்போகும் ஸேதமே 13

இதுவுமுடனே இன்னமிருந்த விதத்திலே
ஏகக்கெடுதல் செய்குவான் கைசேதமே 14

நல்லவர்க ளகப்படார்கள் யிபுலீசுக்கு
நாடிவாற தேதவன் சந்தோஷமே 15

நல்லவழியே தேடுநீ யெக்காலமும்
நல்லமௌத்து மோக்ஷமடைவீ ரெங்கெயும் 16

## றூஹு உடலுக்குச் சொல்லுதல்.

அதே இராகம்.

றூஹு உடலை விட்டுப்பிரியும் போதுகாண்
றூஹுதற்கு சொல்வதைநீர் கேளுகாண் 1

உடலெ உன்னில்லிருந்து இதுநாள் வரையிலு
மொழிந்தனுன்னை விட்டுமலக்குல் மௌத்திடம் 2

செய்கையெல்லாம் கெட்டதேனீ செய்தியே
சேதத்தில் வயதைநீ செலவு செய்தியே 3

ஸஹ்ரெஸஹ்ரபில் வயதிழந்து செத்தியே
ஸகுனத்துல்லாவென்று நீபேர் பெத்தியே 4

வாழ்வுதுனியா வாசமென்று வாழ்ந்தியே
வாழ்வுயெல்லா மிழந்துயிப்போ தாழ்ந்தியே 5

நல்லஅமலை செய்துநீ வாழாமெயே
நஞ்சுதின்ட மீனுவமை யானியே 6

வயதைவீணி லாக்கவேண்டா மென்றுநான்
வயதிலெல்லா மோதியும் மறந் தாயெகாண் 7

இன்றையோடு செய்கையெல்லாம் முடிந்தது
இந்தலோக முன்னைவிட்டுப் பிரிந்தது 8

நன்மையொன்னில் லிருக்குமானால் வாஸமே
நாளைசொர்க்க முண்டுமக்கு பாருமே 9

தின்மையானால் துன்பமேதான் மோஸமே
தீங்குதோஸக் காகுமே கைஸேதமே 10

இந்தவஹ்ராலை சொல்லிறூஹு நீங்குமே
இந்தலோக மெண்ணு மோஸம்பண்ணுமே 11

## றூஹு போனபின் ஜனங்கள் அழுவதை மையத்து கேட்டுத் தேருதல் சொல்லுவது.

றஹ்மான் கண்ணி இராகம்.

சுத்தியுள்ள பேர்களே சூழ்ந்தெனக்கழுகாதீர்
சுத்தனேவல் வந்தெனக்குச் செத்தொழிந்தே னழுகாதீர் 1

இன்னமிருப்பேனென்று எண்ணமிகைத் திருந்தேன்
எண்ணமழிந்து இப்போ திறந்தேனழுகாதீர் 2

அல்லும்பகல்வயதை அநியாயத்தில் இழந்தேன்
அங்கெயென்ன சொல்வெனென் றாண்டுபோறே னழுகாதீர் 3

என்னென்ன வெண்ணமெல்லா மேகமாயெண்ணியிருந்தேன்
எண்ணமேதும் முடியாம லிறந்தே னழுகாதீர் 4

வீடுவாசல் மக்களாசை விரும்பிநித்தம் உகந்திருந்தேன்
வீடுமற்றதும் மிழந்து வீணானே னழுகாதீர் 5

இன்னும்சற்று வயதிருந்தா லென்னென்ன வேலைசெய்வேன்
பின்னெயின்னம் மீளாமல் பிரிந்தே னழுகாதீர் 6

என்சாவுக்கழுதா யேதுமக்கு லாபங்கள்காண்
உன்சாவை நோட்டமிடு மென்சாவுக் கழுகாதீர் 7

## மையத்து மக்களுக்குச் சொல்வது.

அதே இராகம்.

மக்களழுகும்போது மையத்தறிந்து சொல்லும்
ஹக்கனழைத்துப்போறேன் அழுகைனீர் வடியாதீர் 1
பெற்றேன் வளர்த்தேன் பிறியமுங்கள் பேரில்வைத்தேன்
செத்தே னிழந்துங்களைச் செல்வரே யழுகாதீர் 2
என்னாளும் செழிப்பா யிருக்கநீங்கள் கண்குளிர்ந்தீர்
இன்னாளிலென் னுயிரை எமன்பிடித்தா ரழுகாதீர் 3
அல்லாகு என்னாளும் ஆதரவு உங்களுக்கு
வல்லோனின் னேவலென்னை வெல்லலாச் சழுகாதீர் 4
என்னீரல்துண்டே எத்தீமானீர் இன்றோடு
பன்னீரு கண்ணீரு பதறிநொந் தழுகாதீர் 5
உங்க ளழுகையினா லங்கே யதாபடைவேன்
எங்குமெனக்குசுக மேற்றங்கேளு மழுகாதீர் 6
உங்கள்போலத் துக்கவாழி எங்குமிருக்குதிப்போ
எங்கெங்கலைவீர்களோ என்முன் னழுகாதீர் 7
இங்கிருக்கும்போதே என்முகத்தைப் பார்த்திடுங்கள்
இங்கெவிட்டுப் போனபின்பு யேக்கங்கொண்டழுகாதீர் 8
வேளைமிகுதமாச்சு வீணாகநேரமாச்சு
ஏழையைக் குளிப்பாட்டி எடுங்கள் நொந்தழுகாதீர் 9

## மையத்து தன் பந்துக்களுக்குச் சொல்வது.

அதே இராகம்.

என்சொந்த பந்துக்களே யெனமுக வந்தீர்காண்
உஞ்சாவை நோட்டமிடு மெஞ்சாவுக் கழுகாதீர் 1
கூட்டமூட்டமுடனே குலாவிருந்த வுங்களையான்
நோட்டமிடும் தனியானேன் நொந்தமனமழுகாதீர் 2
இன்ன முங்களோடு இருக்கெனக்கு ஆசைகள்தான்
என்னசெய்வே னெமதூதர் எனைப்பிடித்தா ரழுகாதீர் 3
வணங்காம லிழந்தேன் வயதையெந்தன் வீணாலேகாண்
சுணங்காம லெடுங்களென்னை சேர்ந்துசூழ்ந் தழுகாதீர் 4
எப்போதும்பாவி எனைப்போலு மில்லையேகாண்
என்னகூடு மென்னால் எஞ்சாவுக் கழுகாதீர் 5
இன்னமென்ன வேதனைக ளென்பேரி லேறுமோகாண்
இன்னமென்ன சின்னமோ சேர்ந்தெனக் கழுகாதீர் 6
நான்பிறந்து நான்வளர்ந்து நான்வாழ்ந்த வாழ்வையெல்லாம்
நான்கண்ட சொர்ப்பனமாய் நானறிந்தேன் னழுகாதீர் 7

ஆராயிருந்தும் அநேக ருறவாடியும் நான்
ஆரும்துணை இல்லாமல் லானேனழுகாதீர் 8
இங்குநீங்களெல்லா மெனக்குதவும் பந்துக்கள்தான்
அங்குநீங்களாரோ வறியே னழுகாதீர் 9
சொத்திருந்தபடியால் சூழ்ந்தழுக வந்தீர்காண்
செத்தே னிழுந்து சொத்தைச் சுத்திநின் றழுகாதீர் 10
எங்கெங்கோ யேழைகளு மிங்குவந் தழுகிறீர்காண்
இங்குள்ளோ ரேந்துகொள்ள யேனழுவ தழுகாதீர் 11
எனக்காக அழுவதினா லேதுமக்கு நன்மைகள்காண்
உமக்குள்ள சாவை உணர்ந்தழுகும் மறக்காதீர் 12
இனிவேளையாச்சு தெனக்கிருக்க யேலாதுகாண்
எனைத்தூக்கிக் குளிப்பாட்டி எடுங்குளிக்கு வழுகாதீர் 13
என்பாவமெல்லா மிறையவன் பொறுக்கிடகாண்
ஒத்தாசைவைத்து உகந்துகேளும் மழுகாதீர் 14
என்பாடுபோல இருக்குதுங்கள் பாடுகள்காண்
என்னுரு மின்னுளை எண்ணிருங்க ளழுகாதீர் 15

## குளிப்பாட்டும்போது மையத்து சொல்லுவது

மத்னவி இராகம்.

மையத்தெடுத்து மக்கள் மனுஷாள் கழுகையில்
மைத்தமனுஷாள் சூழநின் றழுகையில் 1

அந்தவேளை மையத்தழுது சொல்லுதே
எந்தனுடலு நொந்தமீன்போ லாச்சுதே 2

உடலைமெதுவாய் தேயுமழுத்தாதீர்களே
உடலுமெந்தன் ஸக்தில்லாமலாச்சுதே 3

கொதிக்க உடலில் நீரை வாராதீர்களே
கொதறிசதைகள் கரிகினுடல்போ லாச்சுதே 4

அரைக்கப்போதா தரப்பைத் தேபாதீர்களே
அரைக்கிசெதுக்கி நொறிக்கினுடல்போ லாச்சுதே 5

எறும்பு ஈளிக்கி யேற்வதெந்தன் னுடலிலே
எடைகள்பெருத்த யானைக்கனம்போ லாச்சுதே 6

மிகுதமென்னைப் பிரட்டி உருட்டாதீர்களே
மிகுதிநெருப்பில் வெந்தஉடல் போலாச்சுதே 7

மொரட்டுபெரட்டு இழுப்புத்தேய்ப்பு ஸஹிக்கனே
மடைக்கிச் சுருட்டி பிடிகள் பெருத்துடலாச்சுதே 8

தப்புத்திப்பென் றெடுக்கவைக்காதீர்களே
தப்பியெடுத்து கண்டிறுடலாய்ப் போச்சுதே 9
கபனை மிகுதமிறுக்கி கட்டாதீர்களே
கரிக்கிவேக வைத்தஉடல்போ லாச்சுதே 10
சொந்தமல்ல எனக்குமாத்திர மிந்தஹறால்
சந்திக்குந்தான் உங்களையுங் கட்டாயத்தால் 11

## கபனிடும்போது மையத்து சொல்வது.

அதே இராகம்.

மையத்திற்குக் கபனை யுடுத்தும் போதது
மெத்தநொந்து சொல்லு மனங்கள் நோகுது 1
சேதமேயென் மக்களை மனுஷாள்க்களே
செய்திசிலது சொல்கிறேன் ஹக்பாக்களே 2
இன்ன இன்னாரோடு பேசவில்லையே
இனி வருகேனென்று சேரலாச்சுதே 3
மக்களாசை மற்றஆசை நேசரே
மெத்தறிந்து செத்திடாம லாச்சுதே 4
இன்ன இன்ன வேலைசெய்தே னில்லையே
இன்னமிருக்க வயதிராமல் லாச்சுதே 5
இந்த வயதின் சாவுயேதென் றிருந்தேனே
இந்தகபனே இப்பவுடையா லாச்சுதே 6
எனக்கும்பெரிய மூத்தவர்க ளிருக்கவே
எனக்கு மௌத்து வந்துபயண மாச்சுதே 7
நல்லஅமல்க ளேதும்செய்தே னில்லையே
நாஸமோஸ மென்றக்லயில் ஆச்சுதே 8
ஆசைதனியா ஆவலடங்க வில்லையே
ஆசைதீர்க்க இனிவராம லாச்சுதே 9
இன்றுமென்னைப் போலபேழை யில்லையே
இன்றையோடு பேரு மறைய லாச்சுதே 10
காலமெல்லா மெத்தசொத்தைச் சேர்த்தேனே
கைரு கைராத்துச் செய்திடாமல் லாச்சுதே 11
பொருளு சொத்தைவிட்டு உங்கள்பேரிலே
பறிக்கக் கொடுத்தேன் பாவிஹாலில் லாச்சுதே 12
பெருமையருமையுள்ள வெந்தன் மக்களே
பிரிந்துபோக வேளைவந்து வாச்சுதே 13
இந்தவேளை பாருமெந்தன் கூறத்தே
இந்தநேர மினிவாராமல் லாச்சுதே 14

அழுகவேண்டாம் மக்களே கண்மணிகளே
அருமையறியா தப்புவழியு மாச்சுதே 15
என்னையடக்கி சபஞ்செய்ங்கள் மக்களே
என்னை மண்ணில் மறைக்க வேளையாச்சுதே 16
தாயிதந்தை மற்றுமுள்ள நேஸரே
தாவிஎடுங்க ளென்னை வேளையாச்சுதே 17
இந்தவுலகம் மெரட்டி வழிகேடாக்குமே
இஜ்ஜகத்தெல்லாம் போக்கி நரகில் சாய்க்குமே 18
வெறுத்துதுனியா பெருத்துவணக்கம் செய்யுமே
விரும்பிநீனின் படிநடந்து வையுமே 19

## கபனை கட்டினபின் ஓர் மலக்குச் சொல்வது

### அதே இராகம்.

உடுத்துக்கபனை மையத்திற்குத் திர்ந்தபின்
அடுத்துமலக்கு சொல்வதைநீ கூர்ந்துஸான் 1
இந்த உலகின் வாழ்வு ஸதமென் றிருந்தியே
இந்தலோகம் விட்டுக் கபனைத் தெரிந்தியே 2
மக்கள் மனுஷரோடு கூடி யிருந்தியே
மெத்த துக்கம் பெற்று கபனோ டொழிந்தியே 3
வயதைவீணில் செலவுசெய்து செத்தநீ
வயிறை வளர்க்க வேலைநித்தம் செய்தநீ 4
என்னமோசம் செய்து கபனில்லானைநீ
என்னமோசம் செய்து பயணமானைநீ 5
முந்திக்கேள்வி தொழுதியா வென்றாகுமே
மற்றதெல்லாம் பிந்திக்கேள்வி யாகுமே 6
தொழுதியாநீ நோன்பு றமஸான் வைத்தியா
தொழிலுவட்டி விட்டுநீங்கி பிழைத்தியா 7
புரணிக்கோளை விட்டுநீங்கி பிரிந்தியா
பிறரைநோகப் பேசிடாமல் இருந்தியா 8
நன்மை யேதும் தேடி வைத்து செத்தியா
நல்லவழியில் இருந்துகாலங் கழித்தியா 9
ஊனுமுபெற்றோ ரிடத்திலுகந்து சேர்ந்தியா
ஊனுமு அநியாயத்தை விட்டுப் பிரிந்தியா 10

உந்தன் னஹ்றமாலேது பாவமன்றியே
எந்தநலவு மெழுதப் படவே இல்லையே 11

நல்ல அமலை செய்திருந்தா லின்றைக்கே
நல்ல மாராயம் வரும் ஷக்கன்றியே 12

இன்று உன்னைப் போலதோஷி இல்லையே
இன்றுனக்கு நரகவீடே தொல்லையே 13

நாசமோச மின்று தொட்ட துன்னையே
நன்று யேதும் செய்திடாமல் கெட்டியே 14.

கபறுஹஷறு புல் விருத்து நரகிலே
கஷ்டமடைய வழிகள்தேடி போறியே 15

ஸகலபேருமிந்த ஹாலை கேளுங்கள்
ஸஞ்சலத்தை வைத்துநன்மை தேடுங்கள் 16

## வெளிப்புறப்படுகையில் மையத்து சொல்வது

அதே இராகம்.

வீட்டுவெளியே மையத்தெடுக்கும் போதுகாண்
வெறுத்துநொந்து சொல்வதைநீர் கேளுகாண் 1

குடும்பத்தாரே மக்களேயென் மனிதரே
கொடுமைபிரிச்சல் வந்து நமக்குள்ளாச்சுதே 2

வேதமுறைத்தபடி நடாமல் போச்சுதே
வேதனைகட்கிடங் கொடுக்க லாச்சுதே 3

அய்யொ அய்யோ பிருச்சலே கைஸேதமே
அய்யொகையும் காலும்நடுங்க லாச்சுதே 4

கூட்டுக்கிளியைப் பூனைபிடிக்கும் போலயே
கலைத்துப்பிடிக்கப் பட்டுப்பிரிய லாச்சுதே 5

கூட்டமூட்ட மிழந்து பிரிந்து போறேனே
கூடியிருக்க இனிவராம லாச்சுதே 6

மலக்கு மௌத்து என்னைத்தேடி பிடித்ததே
மறைந்து ஒழிக்கத் தோதில்லாமல் லாச்சுதே 7

துக்கமே என்துக்கமே என்துக்கமே
துக்கமிகைத்து விட்டுப்பிரிய லாச்சுதே 8

இரவுபகலும் மங்களத்தோ டிருந்தனே
இனிவராமல் விட்டுப்பிரிய லாச்சுதே 9

எந்தன் மக்கள் மனிதரே என்தோழரே
இந்தப்பிரிச்ச லிப்ப வந்து வாச்சுதே 10

இந்தப்பிரிச்சலிப்ப எதென்றிந்தனே
இந்தவேளை பிரிந்துபோக லாச்சுதே 11

அழுகையே என்னழுகையே என்னழுகையே
அழுதுமழுதும் பிரிவதேதான் ஆச்சுதே 12

என்னசெய்வோ மானதாச்சு நேசரே
என்னை நீங்கள் சந்திப்பே தென்றாச்சுதே 13

ஸறுசெய்ங்கள் அஸ்ஸலாமு அலைக்குமே
ஜல்தியெடுங்கள் வேளைமிகுத மாச்சுதே 14

## மையத்து தெருவிலானபின் ஓர் மலக்கு சொல்வது.

அதே இராகம்.

மையத்தெடுத்து கொண்டுவரையில் தெருவுக்கு
மலக்கிலொருவர் சொல்லுவாரா மதற்கு 1

இன்றையோடு பிள்ளைபெண்டை விட்டியா
இன்றுகபுறைத் தேடிபயண மாச்சுதா 2

வீடுபொருளு சொந்தரெல்லா மொழிந்ததா
விரும்பி கபுறைத் தேடிப் போகலாச்சுதா 3

இந்த ஸபறைப் போலஸபறு செய்தியா
இப்ப கபுறின் ஸபறுவந்து வாச்சுதா 4

போறவழியே திரும்பி யொருநாள் வருவியா
போயிதிரும்பா பயணமுனக்கு மாச்சுதா 5

நல்லஅமலைச் செய்து யேதும் சேர்த்தியா
நினைத்துத் திரும்பா கபுறுப்பயண மாச்சுதா 6

றப்புநபியின் சொல்ப்படிநீ நடந்தியா
றெம்ப பயத்தின் வீட்டுஸபறு வாச்சுதா 7

பிறந்துவாழ்ந்து இறந்துஜல்தி போறியா
பெருத்த பயத்தின் தானம்போக லாச்சுதா 8

கபறுகஷ்டம் ஹஷறுவருத்த மறிந்தியா
கபனையுடுத்து கபுறைச்சேர லாச்சுதா 9

கபனைத்தவிர ஒன்றுமில்லை யென்றனியா
கபறு வீட்டைத் தேடிபயண மாச்சுதா 10

என்னசெய்வா அங்கெபோயி காலியா
என்னுமதுவே தானமாக வாச்சுதா

அங்கெகைறு நல்லவருக்கென் றறிந்தியா
இங்கெயதெனீ அறிய முன் காக லாச்சுதா 12

## தொழுகை வைக்கயில் மையத்துக்கு ஓர் மலக்கு சொல்வது.

இன்று இங்கே வந்துநீயும் சேர்ந்தியா
என்னும் திரும்பேனென்று எண்ணங் கொண்டியா 1
ஆட்டம்பாட்டம் மொடுங்கிஇங்கே வந்தியா
ஆசை நாட்டமிழந்து உயிரைத் தந்தியா 2
கூட்டமூட்ட மக்களைநீ பிரிந்தியா
குடும்பத்தாரை விட்டுசுகமும் மிழந்தியா 3
நன்றுயேதும் செய்துஇங்கே வந்தியா
நொம்பலம் துடராமலேதும் செய்தியா 4
கபனிலுன்னைச் சுருட்டி தூக்க தந்தியா
கபறிலுதவ கைறுயேதும் செய்தியா 5
கபறுஹாலைக் கேட்டுமனதில் தெரிந்தியா
கபுறை துனியாவில் நினைத்து நொந்தியா 6
மலக்குமாமான் முன்கர் நக்கிறை யறிந்தியா
மலக்குமுன்கர் ஹாலை தெரிந்து பயந்தியா 7
இன்றையோடு ஆனைநீ கபுறளியா
இங்கெயுந்தன் வீடுஆச்சு காலியா 8
கைறுயேதும் செய்திடாமல் காலியா
கபறிலென்ன செய்யவோநீ பாவியா 9
தீனிலுள்ளபடி நடந்து பெறந்தியா
தீனமொதுங்கிஆவெ சொர்க்கவாழ்வியா 10
தீங்குசெய்து இறந்தியாகில் பாவியா
தீங்குதுன்பம் மிகுந்துபெறுவே ஞரியா 11

## அடக்கயில் மையத்து சலாம் சொல்வது.

யாகோத்துபா இராகம்.

ஸலாமுன் அலைக்கும்யென் குளிவரையில் வந்தவரே
ஸலாமுன் அலைக்கும் கபுறுள்ளென்னை வைத்தவரே 1
ஸலாமுன் அலைக்கும் சந்திப்பீரெப்போ மென்கபுறே
ஸலாமுன் அலைக்கும் சொந்த பந்துமுற்ற நேசர்களே 2

தனியாக கபறினுள்ளே தனித்தெந்த வகையிருப்பேன்
தனித்திந்த இருளினுள்ளே தங்கமன மொப்புகிறேன் 3
ஸலாமுன் அலைக்கும் கபறில் மூடுகொள்ளுகிறேன்
ஸலாமுன் அலைக்கும் சொந்தபந்து நேசர்களே 4
என்பேரு உங்களிடம் இன்றோடு மறையலாச்சு
இன்றோடு இந்தகப றெனக்காக விடாச்சு 5
ஸலாமுன் அலைக்கும் நான் மண்ணோடு சேர்ந்தாச்சு
ஸலாமுன் அலைக்கும் என்கபுறை மூடிடுங்கள் 6
எனக்குள்ள மக்களே நானின்றோடு உங்களிடம்
எத்திவிட்டு இந்த கபறெனக்கான வீடுதினம் 7
இன்றடக்க மானேன் எழியவர்க்கு கைறிடுங்கள்
என்பாவத்தைப் பொறுக்க ஏந்திடுங்கள் கைபிகளே 8

## மையத்தை மண்ணில் மறைத்தபின் கபுறு மண்ணால் நிறையமுன் மையத்தில் றூஹு நுழைவதும் றூமான் மலக்கு வந்து கேட்பதும், மத்னவி இராகம்.

மலக்கு மௌத்து கொண்டுபோன றூஹுபின்
மடைக்கிகபுறுக் கனுப்பப்படுகும் கூர்துஸான்
மையத்து மண்ணில் மறைந்தபின்பு றூஹுதான்
மையத்தோடு வந்துசேரும் றூஹுதான் 2
மலக்குறூமானந்த உடனே வருகுவார்
மையத்தெழுப்பி இருக்கவைத்து மொழியுவார்
நன்மை தின்மை செய்ததெல்லா மெழுதிகாண்
நோமிகுதி யாக்கிடாதே ஜல்திகாண் 4
சொல்லுமந்த மையத்து கைஸேதமே
ஜல்தி எழுத இல்லைகடிதம் மையுமே 5
என்னசெய்வே னில்லைகலமு மென்னிடம்
என்னசெய்வே னெவரு கொடுப்பா ரிரவலும் 6
சொல்லுவார்கள் கபனு துண்டொரு கடிதமே
ஸுஸ்திசெய்வ திந்த வேளை மோஸமே 7
கையில்கலிமா விரலிலொன்று கலமுகாண்
கைறுஷர்றே செய்ததை நீ ரெழுதுகாண் 8
வாயினெச்சிமையை கூடணத்தி லெழுதுகாண்
வம்புதும்பைப் பெற்றிடாமல் பேணுகாண் 9
அரண்டுமையத் தழுதுநடுங்கி துடிக்குமாம்
அழுதுகலிமா விரலைகலமாய்ப் பிடிக்குமாம் 10

வாயினெச்சில் கொண்டு எழுதும் கபனிலே
வாழ்ந்துசெய்த நன்மையெல்லாம் முழுதுமே 11

எழுதிநன்மை தீர்ந்தபின்பு தின்மையே
எழுதறப்பை வணங்கித் தொழுதோதாமலே 12

தூக்கிதடியை யடிக்க ஓங்கிச் சொல்லுவார்
தின்மையெல்லா மெழுதி முடிநீ அய்வுமார் 13

மாறுதுனியாவில் குதாக்கு செய்கையில்
மார்க்கமொழிந்த றப்பை வெட்கித் தொதுங்கிடில் 14

இன்றுயேது இந்த வெட்கம் தோஷிநீ
ஒன்றும்விடாமல் பாவத்தெல்லா மெழுதுநீ 15

பதறிநடுங்கிப் பயந்து கெஞ்சி யழுகுமாம்
பகலுமிரவின் பாவமெல்லா மெழுதுமாம் 16

சொல்லுவாரா மெழுதி தீர்ந்த பின்பதை
சுருட்டிமடக்கி முத்திரைசெய் நீ அதை 17

மொழியுமையத் தென்ன செய்வேன் தூதரே
யொஹருசெய்ய முத்திரையு மில்லையே 18

சொல்லுவாரா முந்தன்கையின் பெருவிரல்
குழஉள்ளநகமே மொஹர்நீ யறிந்தருள் 19

எழுதிமடித்துப் பெருவிரல் நகத் தாலது
எச்சிக்கொண்டு முடிக்கும் மொஹரு செய்தது 20

வாங்கிகழுத்தில் மையத்திற்கு மாட்டியே
வழமைபோல மையத்தங்கே நீட்டியே 21

வந்தவழியே போகுவாரா மறியிதே
வணக்கமிருதம் செய்துசேரு நலவிதே 22

## முன்கற்னக்கீர் மலக்குகள் வந்து கேட்பது

அதே இராகம்.

கபறுமூடி தீர்ந்த பின்பு மலக்குகள்
கண்ணுனீல வர்ணமுள்ள பேருகள் 1

மையத்தின் தலைமாட்டுச் சுவரைக் கிழித்தவர்
மெரட்டக் கடுத்த பயந்த முகத்தை யுடையவர் 2

இருபுறத்தில் மையத்தருகே நின்றவன்
இருத்திசவத்தை கேள்விகேட்பா ரறிந்துணர் 3

நானுமிவரும் முன்கற் னக்கீருகாண்
நாங்களுண்டு மென்றறிந் திருப்பீருகாண் 4

உன்னைப்படைத்து வளர்த்த றப்பு யாருகாண்
உனக்குறப்பு விதித்த தீனு மேதுகாண் 5

உனக்குவந்த நபியுமாரு சொல்லுநீ
உனக்கு சொர்க்கம் கிடைக்கசொல்லி வெல்லுநீ 6

நீகொடுத்தா லிந்த மூன்று கேள்விக்கும்
நீதமான மறுமொழி என்றென்றைக்கும் 7

சொந்தவீடு சொர்க்கமென்றே ஆவியே
சுகங்கொடுக்கப்பட்ட அப்தா போவியே 8

ஸஞ்சலங்க ளொன்றுமில்லை எங்குமே
சௌக்கியங்க ளொன்னைச்சுற்றித் தங்குமே 9

நல்லவர்கள் கொடுக்குவார்கள் நல்ஜவாப்
நல்லசொர்க்க மடையுவார்கள் பிஸ்ஸவாப் 10

நரகவீட்டைத் திறந்துகாட்டி மூடுவார்
நல்ஜவாபைக் கொடுத்திடாதோர் வீடுபார் 11

என்றுசொல்லி சொர்க்கவாசல் திறந்தவர்
என்றுமடையும் சொர்க்கசுகத்தை என்றவர் 12

சூஸ்திரத்தில் மறைந்துவிடுவா ரறிந்திடும்
சொர்க்கசுகங்க ளென்றுமிவரைத் தங்கிடும் 13

கெட்டவர்கள் பார்த்தவ்வாளை நடுங்குவார்
கேள்விக்கேதும் சொல்லிடாம லழுகுவார் 14

கத்தக்கத்த மெத்தக்கதற தோஷியை
குத்திமெத்த கொடுக்குவார்கள் பூஸையை 15

இந்தவகையே மூன்றுதடவை செய்தவர்
இந்தமூன்று கேள்விகளையுங் கேட்டவர் 16

என்னமோசம் செய்துவந்தாய் இங்கெநீ
இங்கைக்காக என்னதேடி வைத்தெநீ 17

என்றுசொல்லி சொர்க்கவாசல் திறக்குவார்
எழுந்துபார்க்க சொல்லிமூடிச் சொல்லுவார் 18

இந்த மூன்று கேள்விக்கும் சொன்னஜவாப்
இருந்ததுனக்கு இந்தவீடு ஐகருப் 19

என்றுசொல்லி திறந்து நரகவாசலை
எரிந்துகருகு நினைத்து நித்தமாவலை 20

என்றுசொல்லி சூஸ்திரத்தில் மலக்குகள்
எழுந்துகபுறை விட்டுமறைவா ரறிந்துகொள் 21

உடனே நரக நெருப்புந் தேளும் பாம்புகள்
உகந்து நிறைந்து கொள்ளுமந்த கபறினுள் 22

இன்னமெத்த வண்டு அட்டை குளவிகள்
எண்ணித்தீரா விஷபிராணி வஸ்துக்கள் 23

கூட்டங்கூட்ட மாக வந்து சேருமே
கோடிலெட்சம் இம்மிசைகள் செய்யுமே 24

## மையத்துச்செய்திருந்த அமல்களை மலக்குச்சொல்வது அதே இராகம்.

சொல்லும் கபறில் மையத்தின் அஹ்மாலுகள்
சூந்துகபறில் மையத்தே சில செய்திகள் 1

உன்சொத்தும் தோழரும் பிரிந்தார்களா
உதவியாரு முன்னுடன் இருந்தார்களா 2

உன்னைத்தனியாய்ப் புதைத்துப் பிரிந்தா ரறியிதே
உனக்குத்துணை யென் றுரிருந்தா ரறியிதே 3

இன்றுனக்கு எங்களொழிய துணைகளார்
இன்றுமென்றும் மெங்களாலே கூலிபார் 4

நீஹுறயாத்தில் செய்த நன்மை தின்மைகள்
நாங்களென்று அறிந்தாகூடி இருந்துகொள் 5

நன்மை மிகுதம் செய்திருந்தா லின்றுநீ
நரகமொதுங்கி சொர்க்கம்பெறுவா யின்றுநீ 6

தின்மைமிகுதம் செய்திருந்தா லின்றுநீ
சிங்குதுன்பம் மிகுதம் பெறுவே தோஷினீ 7

## மூமினாகிய மையத்துக்கு கபறில் அல்லாகுத்த ஆலா தேறுதல் சொல்வது அதே இராகம்,

ஸாலிஹான மைத்தழுது கபறிலே
ஸலித்துசொல்லும் றப்பைஞடி கபறிலே 1

ஸேதமே கைஸேதமே தனியானனே
ஸேதிகேட்க யாரையும் நான்காணனே 2

றப்பனுநீ இந்தவேளை யுதவிசெய்
றஹ்மத்தெந்தன்பேரி லிறக்கி கிருபைசெய் 3

இந்த நாளுவரையி லுந்தன் கிருபையில்
இருந்துதனிக்க லாச்சுதிந்த கபறினில் 4

அந்தவுடனே ஸப்தமாகும் நேஸனே
அழுகவேண்டாம் அருமைபா னென்னடியனே 5

உனக்கு உடலுமுயிரும் ஈமான் தந்தனே
உனக்குவாழ வயதுரிஸ்கை வகுத்தனே 6

இன்னமுனக்கு மட்டில்லாத உதவிகள்
என்னைக்கொண்டே ஆயிருக்கும் கூர்ந்துகொள் 7

இன்னுமென்றும் மிகுதமுதவி செய்குவேன்
இன்பமான சொர்க்க சுகங்க ளீய்குவேன் 8

உன்னைப்பெற்ற தந்தைதாயைக் காணவும்
என்னை யுந்தன்பேரி லெழுவதாயிரம் 9

கிருபையாளனென்று எண்ணென்னடியனே
இரக்கமழுகை ஏனுனக்கென் நேசனே 10

அழுகவேண்டா மீய்வனுனக்கு பிந்தினன்
அழவில்லாத சுகங்களென்னும் மிகுதினன் 11

ஹூறுலீங்கள் உனக்குமிகுதம் தருகுவேன்
ஊழியர்களின்னம் பணிக்கிக் கொடுக்குவேன் 12

அறுஷைக் குலுக்கும் உந்தனழுகை ஸபுருசெய்
அமரவைக்கும் நரகநெருப்பைப் பொறுமைசெய் 13

ஸொர்க்கவாஸலிந்த எடையில் கபறிலே
சுகத்தைக்கொடுக்க திறக்கப்படுமே நொடியிலே 14

ஸொர்க்க சுகங்களெண்ணு மவரும் நேமமாய்
ஸொஸ்தமாகப் பெறுகுவாரே சேமமாய் 15

நல்ல அமலை செய்தவர்க்கே வாரமே
நரகவீடு கெட்டவர்க்கே மோசமே 16

## மஹ்ஷறின் விபரம் அதே இராகம்.

நாளை மஹ்ஷற் ஹாலை என்ன சொல்ல நான்
நாமளெல்லா மிறந்துபோன பின்புகாண் 1

இன்னமக்லூ காத்து மழிந்த பின்பு காண்
இன்ன மிராவுபகலு மொழிந்து போமிகாண் 2

ஹக்தஆலா எழுப்புவா னெல்லோரையும்
ஹக்குனீதஞ் செலுத்த எல்லார் பேரிலும் 3

பொழுதையாக்கி வல்லையத்தின் னுயரத்தில்
பொறுக்கமுடியா வெயிலுஞ் சூடும் செய்ததில் 4

எரிக்கவைத்து மஹ்ஷறுளி பேரிலே
இரைந்துக்கத்தவைக்குவான் மைதானிலே 5

வெயிலின் காய்வில் பூமிகொதிக்கும் கேளுகாண்
வெந்து குமுளிபோட்ட கூழைப்போலகாண் 6

மஹ்ஷறுளி தலைவெடித்து மூளைகள்
முகத்து வழியே வடியுமப்போ தறிந்துகொள் 7

வெயிலினாலே வேர்த்து முடலு முருகுமாம்
வெந்தமீன்போலாயி முகங்கள் கருகுமாம் 8

கத்தி அழுது அடிக்குவார்கள் தலைகளை
கதறியோடத் தேடுவார்கள் வழிகளை 9

அறுஷின் னெதிரில் லழைக்கப்படுவா ரனைவரும்
அரண்டுபயந்து வருகமாட்டா ரெவர்களும் 10

அந்தவுடனே நரகவடத்தை யனுப்பியே
அடுத்தடுத்து சுழன்றுவந்து நெருக்கியே 11

தூரத்தியவரைச் சேர்க்க அறுஷின் னெதிரிலே
துய்யசமத்த னிட்டுயேவல் நொடியிலே 12

இரக்கமற்ற கொடுமையுடனே சூழ்ந்திடும்
ஏவலெல்லா முடிய செய்தே தீர்த்திடும் 13

நபிகளெல்லா மழுகுவார்கள் நப்ஸியா
நப்ஸிநப்ஸிநப்ஸி யென்று மிகுதியா 14

மற்றவர்கள் பாடுதலையில் கைகளை
மெத்தத்தடித்து முறித்து கையின் விரல்களை 15

விதியெவிதியே யென்று அழுவோ ரெத்தனே
விழுந்துபுரண்டு புலம்பியழுவோ ரெத்தனே 16

அய்யொ அய்யோ வென்பவர்களெத்தனே
அலறிக்கதறி புலம்புவார்க ளெத்தனே 17

வெயிலின்சூடு வதைக்குமென்போ ரெத்தனே
வயிறுவெடித்து குளம்பி கிடப்போ ரெத்தனே 18

கையைத்தலையில் வைத்து அழுவோ ரெத்தனே
கையைக் கழுத்தில்மாட்டி அழுவோ ரெத்தனே 19

காலும்கையும் நடுங்கியழுவோ ரெத்தனே
கண்ணுமுழிகள் நட்டுஅழுவோ ரெத்தனே 20

துடித்துப்பதைத்து கத்துவோர்களெத்தனே
துடித்தித்துடித்து கதறியழுவோ ரெத்தனே 21

வயறுமண்டை வெடித்தழுவோ ரெத்தனே
வெடித்துசதைகளூறுவடிவோ ரெத்தனே 22

பெரண்டுமிதியிலுருண்டு கிடப்போ ரெத்தனே
பொறுக்கமுடியாமல் துடிப்போ ரெத்தனே 23

கேடேகேடே என்பவர்களெத்தனே
கேள்விக்கென்ன சொல்வனென்போ ரெத்தனே 24

யாரைப்பார்த்தபோது மழுகைப்பாடுதான்
யாருமழுகா பேரிராத ஜாயிதான் 25

பெண்டுபிள்ளை புருஷனுறவுமேதுகாண்
பிறியமுள்ள ஜனங்களுறவுமேதுகாண் 26

ஒருவர்க்கொருவர்க்கேது பேச்சு கேளுகாண்
ஒருவர்க்கொருவர்க் குதவிடாத வேளைகாண் 27

ஏகமான கூக்குரல்களாகுமே
எங்கெபார்த்தபோது மழுகைஸப்தமே 28

என்னசெய்வோ மிஷ்டரே கைஸேதமே
இந்த நாளுவந்து வாச்சே தீருமே 29

## நபிமார்களிடம்போய் ஷபாஅத்தைத்தேடல். அதே-இராகம்.

ஸகலமுஸ்லீமான மஹ்ஷருளிகள்
ஸகலநபிகளிடமு மொழிந்தழுவாருகள் 1

றப்புக்குகந்தபேர்களானநபிகளே
றப்புவேதமொழிகள் சுமந்தபேர்களே 2

நீங்களல்லாவுக்குப் பிறியமானவர்
நீங்களவனையடுத்துப் பேச வுகந்தவர் 3

எங்கள்பேரில் றப்பு கிருபைசெய்யவே
இன்றுமீட்சிதந்த தாபைநீக்கவே 4

கேட்டுக்கொடுங்கள் றப்பைக்கெஞ்சி நபிகளே
கேடுபொஷிக்கி கரிக்கி தீர்த்த தெங்களே 5

சொல்லுவார்க ளிந்தவேளை எங்களால்
சொல்லிக்கேட்டுக் கொடுக்க முடியா பெரியஹால் 6

எங்கள்ஹாலே நப்ஸிநப்ஸி நப்ஸியா
என்றுசொல்லி யழுகிறோமே மிகுதியா 7

போங்களிபுறுஹீமு இடத்தில் ஜல்தியா
போயவரும் அந்தப்படியே சொல்லுவார் 8

இன்னமிபுறுஹீமு சொல்வாரஹ்மது
இன்னயிடத்தில் லிருக்கிறார்கள் தடமிது 9

போங்களவரு செய்யுவா ரீடேற்றங்கள்
போகுவார்கள் போட்டுப்போட்டுக் கூக்குரல் 10

றசூலுல்லாவைக்கண்டு ஷபா அத்துப்பெறுகுதல். அதே-இராகம்.

அஹ்மதா முஹம்மதாயா ஸையதா
அம்ஜதாமு மஜ்ஜதாயா ஸையதா 1

ஷாபிஹாமு ஷப்பஹாயதல்கறம்
ஸாகிபுல்லாஹில் கபூரிகிர்றகம் 2

என்றுசொல்லி நபியிடத்தில் சேருவார்
ஏங்கியேங்கி அழுது முறைகளிடுகுவார் 3

சங்கடங்கள் தங்கடங்கள் சொல்லுவார்
சப்தமிகுதம்போட்டுக் கெஞ்சி யழுகுவார் 4

இந்தஹாலைபார்த்து கைறுல் அன்பியா
இங்கெவாங்க ளென்றுசொல்லி ஜல்தியா 5

சொல்லுவார்களும்மத்தா என்னும்மத்தா
ஸபுறுசெய்யுங்கள் அழுகவேண்டாம் உம்மத்தா 6

பார்த்து உங்கள் ஹாலைசரல் நடுங்குதே
பதறிமனதித்துடித்து மிகுதங் கருகுதே 7

என்றுசொல்லிப் போகுவார்கள் றப்பிடம்
ஏகமான துக்கத்தோடே ஹஸ்பிடம் 8

அர்றஹ்மா யாறஹீமாவென் றழுகுவார்
அறுஷின்னடியில் செய்து ஸஜதா மொழியுவார் 9

அறுசைப்படைத்த வல்லவாயா ஹஸ்பனே
ஹஷறு நஷறை செய்தவாயா றப்பனே 10

யாகபூறு யாகபூறு யாகபூற்
யாஜவாதா யாஜவாதா யாசக்கூற் 11

மெஃறுசெய்து மஹ்ஷறுளிபேருமேல
மீட்சிகொடுத்து மோட்சந்தருவாய் நேருமே 12

இன்ன மவரு பாவமெல்லா மழித்துநீ
இரக்க மிகுதஞ் செய்துகிருபை செய்யிநீ 13

நீசபூறு நீகரிமு நீறஹீம்
நீஅலீமா நீறஊபு நீஹலீம் 14

கிருபைசெய்தே தீரவேண்டும் றப்பனே
கொடுமைநீக்கி தயவுசெய்நீ ஹஸ்பனே 15

உதவிகாறு உதவிசெய்தா மீட்சியே
உன்னையன்றி யுதவியாருமில்லையே 16

இவ்வளவெல்லா மொழிந்து முடியுமுன்னமே
இரங்கிறஹ்மான் சொல்வதைநீர் கேளுமே 17

அழுகவேண்டா மழுகவேண்டா மென்ஹபீப்
அறுஷாகுலுங்கிக் கவுந்துபோகும் ஜலத்தீப் 18

சூடுநரகமமர்ந்து போகு மேலத்தீப்
சூடுபோயி குளிர்ந்துபோகும் ஜஷீப் 19

தறையைவிட்டும் தலையைத்தூக்கென் தோழரே
தவுலத்தெல்லா முமக்கு சொந்தம் நேஸரே 20

படைத்தனில்லை யாகிலும்மை நேஸரே ,
படைப்பதேது மற்றவஸ்தை நேஸரே 21

தன் துவாவை ஸம்மதத்தி லாக்கினேன்
தன் மனம்போலிய குற்றறை நீக்கினேன் 22

தறையைவிட்டுத் தலையை யெடுங்கள் ஷாபிஹா
தாங்கிகையை யேந்திநிற்பார் நாபிஹா 23

கஷ்றைநீக்கி மெஃறாளருக் கிப்கவன்
கண்டிப்பான கோலுமீஸான் கட்டவன் 24

கட்டிரண்டு தொங்குமதுவில் நேஸனே
திட்டமாகக் காணுவேநீ வாஸனே 25

நன்மைதின்மை ஒவ்வொருவர் செய்ததை
நன்மையொன்றில் தின்மையொன்றில் வைத்ததை 26

நிறுத்துநன்மை கனத்தவர்க்குச் சொர்க்கமே
நிறுத்துத்தின்மை கனத்தவர்க்கு நரகமே 27

என்றுதிர்ப்பு செய்து நல்ல நீதவான்
எதிப்பாலம் போகச்சொல்லி வில்ஜிறான் 28

பாலமொன்று நரகமுகத்தில்லாக்குவான்
பாவிகல்லோ ரனைவரையும் மேற்றுவான் 29

கத்தி முனைக் காரைகூர்மை யானது
கத்திகளுள்ள் பாலமானது 30

காற்றுமிருளும் மிருகமான தானமாம்
கடிணமாக ஆடுகின்ற பாலமாம் 31

மட்டமேத்த பெறக்கத்தூரங் கேளுகாண்
மொத்தமூனு அல்புளாது பாருகாண் 32

பாவமிகுந்தோ ரேறும்போது எடையிலே
பாலமறுந்து விழுகுவார்கள் நரகிலே 33

கத்திரீகள் கத்திரிக்கும் பாவியே
கத்திநரகில் விழுகுவார்கள் சாடியே 34

நல்லவர்கள் பாலமேறி சொர்க்கத்தை
நடந்துசேர்வா ரெடுத்துசிலரு ஆபத்தை 35

சிலருமின்னல் போலபோயி சேருவார்
சிலருஜல்தி சொர்க்கம்போயி ஆழுவார் 86

இக்கரை மைதானிலேற வாகனம்
இருக்கமட்டும் சொர்க்கலோகம் சேகனம் 37

இவைகளேக மூர்க்கமான மிருகமாம்
எடுத்துமவரை சுவர்க்கம்போயி சேர்க்குமாம் 38

இவைக ளவர்கள் கொடுத்த குருபானீயாம்
எதிருமிருந்து விரஷலாகப் போகுமாம் 39

நல்லவர்கள் சொர்க்க வாழி யாகுவார்
நரகவாழி நரகம் போயி சேருவார் 40

மௌத்தை யறுக்கப்படுகு மிருபேரிடையிலே
முழுதுமோதி விளங்கு துலங்கும் மனதிலே 41

மரணவிளக்கம் மனதைத்துலக்கும் முடிந்தது
மிகுந்த மஃனபொருளு விளக்கம் பொதிந்தது 42

## முனாஜாத்து.

ஸல்லியா றப்பல் அனாமி வஸ்ஸமா
அலன்னபியில் முஸ்தபா முஸல்லிமா 1

இல்முநாலே எங்கள் மனதை வெளிச்சமா
ஆக்குவொழிவாலாக்கு நாவை சுத்தமா 2

எந்தபாபும் தவறிடாமல் நாவுலே
எணக்கமாக அக்ஷரத்தை ஓட்டிவை 3

சுத்தமாக குறுஆனை நாங்கள் ஓதநீ
சுத்தமாக்கித் தந்தருள்நீ நாவைநீ 4

இமாமுகஸ்ஸாலீ மனதைப்போலநீ
ஒளிவாகஆக்கு எங்கள் மனதை றப்புநீ 5

ஆபூசஷ்றமா நாவுதொண்டை போலநீ
அழகாக ஆக்குஎங்கள் தொண்டை நாவைநீ 6

படிப்பைக்கெடுக்கும் ஆபத்தைநீ தட்டிவை
பிடித்தநோயை ஜல்தியாக நீக்கிவை 7

இன்ஸ் ஜின் ஷைத்தானுனாலே துன்பங்கள்
எங்கள்பேரில் வந்திடாமல் காத்துக்கொள் 8

நோயிபஞ்சம் துக்கம் வந்தணுகாமலே
நாயனே நீகாரு எங்கள் யாபேர்களை 9

எந்தநாளும் உன்னைநாங்கள் வணங்கவே
உபகாரம்செய்யி விட்டிடாமல் காருவே 10

நாங்களிருக்கும் காலமெல்லா மிகுதமா
நல்லஇரணம் தவுலத்தைத்தா நேமமா 11

உனக்குப் பொருந்தா வேலைய ஓர்காலமும்
எங்களாலே ஆயிடாமல் காத்திடும் 12

கடைசிபாவம் பொறுத்து ஈமானுடனேநீ
கொடுத்தருள்நீ எங்கள்பேரில் மௌத்தைநீ 13

எங்கள்தாயி தகப்பரும் தாதாக்களும்
இன்னமெங்கள் தாதிமார் நாளுக்களும் 14

நன்னிமார் சகோதரரும் குல்லேசரும்
நல்லமூமீன் முஸ்லிமான பேர்களும் 15

இத்தாதிபேரும் ஜென்னத்துல் பிர்தௌசுக்குள்
எந்த நாளுமிருக்க நல்லுதவி செய்தருள் 16

சக்ருத்து கொடுத்து சொர்க்கம் புருதமட்டிலும்
பிக்ருத்துசகல னும்பலத்தைக் கார்த்திடும் 17
இலாஹனுநீ ஆபியுன் கரமின்கடல்
இவாளு எங்கள் பாவத்தனை அழிவதில் 18
யாரப்பனுயா ஹஸ்பனுயா சல்கறம்
இந்த அஸ்ஹாறை மொழிந்த ஆஷிக்கும் 19
இன்ன மவரின் தாயிதாதி நானிக்கும்
அஷ்றபாபுபாபா நன்பாபா அஜ்தாதுக்கும் 20
அண்ணன் தங்கை அக்றபான பேருக்கும்
உஸ்தாதுக்கும் ஆமீனை சொல்கின்றோருக்கும் 21
பாவம்பொறுத்து சொர்க்கம் கொடுத்துக் கிருபையால்
பாலிலீங்க ளோடிருக்க செய்ஜலால் 22
ஸல்லியா ரப்பல் அனுமி வஸல்லமா
அலன்னபியில் முஸ்தபா முஸல்லிமா. 23

ஆமீனுமீன் யாரப்பல் ஆலமீன்.

முற்றிற்று.

---

## பலநோய்களும் நீங்கும் பாதுகாப்பு பஞ்சமூலமாலை.

இந்நூலிடங்கிய முஹம்மதிய்யாமாலை, பக்தி ஆனந்தபாத்தி முத்துமாலை, ஷிபாவுல்வபா முனுஜாத்துமாலை, தபவுல்வபா கார்மான முனுத்துகளை கீழ்காணும், விஷயங்களுக்கு ஓதிவந்தால் உடனே நிவர்த்தியடைவார்கள். வெள்ளி திங்கள் இரவுகளில். ஒரே எண்ணமாக மனதுருக்கத்துடன் ஓதிவந்தால் நற்சுகத்தை காண்பார்கள். யாதொரு மனக் கவலையுடையவர்கள், வளக்காளிகள் தமக்கனுகூலத்தைநாடி, ஜுதுரியெனும் வைசூரி, ரீஹுல் அஹ்மறெனும் பிளேக்கு, பேதி, காய்ச்சல், காச்சலுடையவர்கள், கன்மப் பிணி காணப்பிணி யுடையவர்கள், இன்னும் வேறு எந்த வியாதியஸ்தர்களானுலும் இந்த ஷிபாமாலையை ஓதிவந்தால் நற்சுகத்தை காண்பார்கள். பிணியுடையவர்கள் ஓதினுலும் அல்லது பிணியுடையவர்களுக் கருகேயிருந்து வேறொருவர் ஓதிவந்தாலும் இப்பாடலில் அமைத்தபேர் நாமத்துடைய நாதாக்கள், மூதாக்களின் துஆ பறக்கத்தால் நற்சுகத்தை காண்பார்கள். விலை அணு 4.

இந்த புஸ்தகமும் அனேக விதமான தமிழ் புஸ்தகம் றப்பர் இஷ்டாம்பு மருந்து சாமான்களும். நமது கம்பெனியில் பெற்றுக் கொள்ளலாம். வியாபாரிகளுக்கு கமிஷன் கொடுக்கப்படும்.

எமது விலாசம்:—யூசுபிய்யா கம்பெனி,
பெருமாள் குளந்தெருவு,
கோட்டாறு.

# அயத்தங்க திராவகம்.

(இரும்பைப்பார்க்கிலும் கடினமானலோகம் வேறொன்றுமில்லை,)

தாதுவிர்த்திக்கு இதுவேசிறந்தது. இரும்பின்சத்தை உண்டவனுக்கு நரை திரை உண்டாகாது பொன், வெள்ளி, முதலியவைகள் அந்தசமயத்தில்மட்டும் அதிககுணத்தைக்கொடுத்துப் பிறகு தேகத்தைக் கெடுத்துவிடும். இதனால் தான் இருப்பவன் இரும்பைத்தின்றால் போரவன் பொன்னைத் தின்பான் என்று இவ்வுலகத்தில் சொல்லிக்கொள்கிறார்கள். ஒருவன் திராவகத்தைச் சாப்பிடுவதற்குமுன் தன் தேகம் எவ்வளவு நிறையுள்ளதென்று நிறுத்துக்கொண்டு அதன் பின் இந்தத் திராவகத்தை 40-நாட்கள் சாப்பிட்டு மறுபடியும் தாரசில் நின்று நிறுத்துப் பார்ப்பாரானால் எறக்குறையமுன்னிருந்ததற்கு (ஒருவீசை) அல்லது 40-பலம் அதிகநிறையிருப்பார்கள் இதை ஒவ்வொருவரும் அனுபவத்தில். தெரிந்துக்கொள்ளலாம்.

(1) நரைத்த மயிரைக் கறுப்பாக்கும் (2) புழுவெட்டினாலும் அதிக உஷ்ணத்தினாலும் உதிர்ந்த மயிரை முளைப்பிக்கும். (3) கண் கை கால் எரிச்சலைப்போக்கும் (4) முக வசீகரத்தை உண்டாக்கும் (5) தேகத்திலுள்ள உஷ்ணத்தை அகற்றி வாய்வைக்கண்டிக்கும் (6) கை கால் இடுப்பு இவற்றின் அசதிகளையும் நோய்களையும்போக்கி என்றுமில்லாத பலத்தைக்கொடுக்கும். (7) பித்தவாயுவை ஒரு மண்டலத்தில் அடியோடு தொலைத்துவிடும். (8) அதிகபசியையும் ஜீரணசக்தியையும் உண்டாக்கும். (9) தளர்ந்துபோன நரம்புகளை வலுப்படுத்தி முறுக்கேற்றுவதில் இதற்கு மிஞ்சின மருந்து வேறே கிடையாது. (10) நகக்கண்களிலும் விழிகளிலும் ரத்தமில்லாமல் வெளுத்துப்போனவர்கள் இந்தத்திராவகத்தை எண்ணிக்கையாக ஒரு மண்டலம் உட்கொண்டால் ஆச்சரியப்படத்தக்க விதமாய் தேகமுழுதும் புதியரத்தம் பரவும் பித்தகாமாலை, சோகை, குன்மம், கை கால் வீக்கம், குடல்வாதம் முதலியவைகளை ஒருவாரம் எட்டுநாளையில் போக்கி நல்ல ஸ்திதியில் கொண்டுவந்து விடும்,

இதனை உண்பதனால் உண்டாகும் முக்கிய குணங்களாவன

தாதுவிர்த்தி யில்லாதவர், இரும்பைப் பழுக்ககாய்ச்சி அதை ஜலத்தில் தோய்த்து அந்தஜலத்தை தினந்தோறும் குடித்துவந்தால் தாதுவிர்த்தி உண்டாகுமென்று வைத்தியசாஸ்திரங்கள் கூறுகின்றன. இதற்கேஅந்தக் குணம் இருக்கிறபோது அயத்தினுடையவும் காந்தத்தினுடையவும் சத்தைத்திராவகமாக இரக்கியிருக்கும் இந்தப்பரம அவுஷதத்தை ஒருவன் உட்கொண்டால் அவன் தேகம் வஜ்ரசரீரம் போலகிவிடு மென்பதற்கு என்னதடையிருக்கின்றது; உபயோக விபரம் மருந்துடன் வரும்.

| | | | |
|---|---|---|---|
| 20-நாளைக்கு சாப்பிடக்கூடிய புட்டி ரூபா | 1 | 4 | 0 |
| 40-நாளைக்கு சாப்பிடக்கூடிய புட்டி ரூபா | 2 | 0 | 0 |

ஒரு டஜனுக்கு 2-புட்டி கமிஷன் கொடுக்கப்படும்.

---

எமது விலாசம்—ருயல் அண்டு கம்பெனி,

சுப்ரமணியசெட்டி தெரு, திருவல்லிக்கேணி, மதராஸ்.

## கூந்தல் வளரும்

# இராஜலக்ஷ்மி ஹேராயல்

## அநேக நற்சாட்சி பத்திரங்கள் பெற்றது.




இத்தைலம் ஸ்ரீபுருஷாளிடத்தில் எப்போதும் இருக்கத்தக்கது.

கடைவீதியில்விற்கும் கேவலமான வாசனை எண்ணையைப் போன்றதன்று மயிரைநீளமாக வளர்க்கும் நல்ல வனமூலிகைகளாலும் நம்மிர்துக்கள் சரீரத்திற்கு ஒத்துக்கொள்ளும் நல்ல எள்ளினுடைய எண்ணையாலும் தயார்செய்யப்பட்டது.

ஸ்ரீபுருஷாளுக்குள்ள நேர்த்தியானகூந்தலை உதிர்ந்து போகாமலும் அகாலத்தில் நரைக்க வொட்டாமலும்செய்விக்கும். இதில் கொஞ்சம் கையில்விட்டுத் தலையில் தேய்த்து தலைமயிரை வாரிவர பட்டுக்குச்சு போல் வளரச்செய்யும் அன்றுமலர்ந்த புஷ்பங்களின் வாசனைக்கு நிகராகயிருக்கும். ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் இருக்கக்கூடியது.


சாதாரண எண்ணை தடவுவதற்கு பதில் இதை உபயோகித்தவர்தால் மூளையின் கொதிப்பைதணித்து கண்ணுக்கு குளிர்ச்சியைதரும் தலைமயகசம் மனோவியாகூலம் மயிரின் சிவந்தநிறம் சுண்டு மயிர்வெடிப்பு முதலியவைநீங்கி சிரசுக்கு குளிர்ச்சியைத்தரும். புட்டி 1-க்கு ரூபா 1.

| | | |
|---|---|---|
| மல்லிகைப்பூ எண்ணை | புட்டி 1-க்கு விலை | அணா 12. |
| சம்பங்கி எண்ணை | ,, | அணா 12. |
| தாழம்பூ எண்ணை | ,, | அணா 12. |
| மரிக்கொழுந்து எண்ணை | ,, | அணா 12. |

இந்த எண்ணைகளிலும் மேற்சொல்லிய குணமுண்டு.

1-டஜன் புட்டிக்கு 2-புட்டி கமிஷன்.

## சர்வதேள் விஷசஞ்சீவி.



இதைமருந்துடன் அனுப்பும் டைரக்ஷனிற் சொல்லியபடி உபயோகித்தால் விஷத்தீண்டிய 5-நிமிஷத்திற்குள்ளாக தான் வருத்தப்பட்டு சகிக்கக்கூடாத துன்பத்திலின்று மிகவும் ஆச்சரியப்படத்தக்கவிதமாய் விஷம்நீங்கிவிடும். 2-விதமருந்து அடங்கிய பாக்கெட் 1-க்கு அணா 8.

டஜன் 1-க்கு ரூபா 5.

---

எமது விலாசம்—ராயல் அண்டு கம்பெனி.

சுப்ரமணியசெட்டி தெருவு, திருவல்லிக்கேணி, மதராஸ்.